**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**26 ஜூன் 2015 / 09 ரமதான் 1436**

# <u>குடும்ப உதவியைப் பலப்படுத்துவதன் அவசியம்</u>

اَلْحَمْدُ للهِ الَّذِي أَنْزَلَ الفُرْقَانَ وَ أَيَّدَ النَّاسَ بِالحِكْمَةِ وَ البَيَانِ،
وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ شَهِدَ لِنَفْسِهِ
الْوَحْدَانِيَّةَ وَ الإِحْسَانِ وَشَهِدَ بِهِمَا مَلاَئِكَتُهُ وَ الثَّقَلاَنِ، وَأَشْهَدُ
أَنَّ سَيِّدَنَا مُحَمَّداً عَبْدُهُ وَرَسُوْلُهُ المَبْعُوثُ بِالرَّحْمَةِ وَ الرِّضْوَانِ ،
اَللَّهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَ عَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ
تَسْلِيماً كَثِيْرًا.أَمَّا بَعْدُ فَيَا عِبَادَ اللّهِ اتَّقُوْا اللّهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ
تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ مُسْلِمُوْنَ.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே! அல்லாஹ்வின் மீதான நமது "தக்வா" எனும் பயபக்தியை அதிகரித்துக் கொள்ள நாம் அனைவரும் இணைந்து முயல்வோமாக! அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளையும் நிறைவேற்றுவதிலும் அவன் நமக்குத் தடை செய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதிலும் தொடர்ந்து "இஸ்திகாமத்" (நிலையாக) இருப்போமாக! அருள்களும் பாவமன்னிப்புகளும் நிறைந்த இந்த ரமதான் மாதம், நமது உள்ளங்களை

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது உண்மையான நம்பிக்கை கொண்டுள்ளதாக ஆக்கட்டுமாக! மேலும், நமது குடும்பத்தார்கள் மற்றும் சமுதாயத்தின் அனைத்து உறுப்பினர்கள் மீது "இஹ்சான்" (கருணைச் சிந்தனை) மிக்கவையாகவும் ஆக்கட்டுமாக!

மரியாதைக்குரிய ஜமாஅத்தார்களே!

புனிதமிக்க ரமதான் மாதம், நமது ஆன்மீகத்தின் அளவை அதிகரித்துக் கொள்வதற்கும், அல்லாஹ்வின் வெகுமதிகளையும் அவனது திருப்தியையும் அடைவதற்கும் அதிகமான வாய்ப்புகளை நமக்கு வழங்குகிறது. கடந்த வாரம், இந்த ரமதான் மாதத்தை, நமது குடும்ப உறவுகளை பலப்படுத்திக் கொள்வதற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென நினைவூட்டப்பட்டோம். காரணம், நமது குடும்பத்தார்கள் தான் நமக்கு முதலில் உதவி செய்பவர்களாக உள்ளார்கள். அவர்கள் மூலம் நாம் ஆன்மீகம் மற்றும் உணர்வு சம்பந்தமான பலத்தைப் பெற முடியும். சிறந்த மதிப்பீடுகளையும், நன்னடத்தைகளையும் நம்மில் ஏற்படுத்திக் கொள்ள முடியும். நாம் சவால்களை வெற்றிகொள்ள முயற்சிக்கும் போது, முதன்முதலாக, நாம் நாடுவதும் நமது குடும்பத்தார்களைத் தான். அவர்கள் தான், நாம் ஆலோசனைகள் கேட்பதற்கு மிகவும் தகுதியானவர்களாக இருக்கின்றார்கள். அன்பியாக்கள் எனப்படும் இறைத்தூதர்களின் குடும்பங்களில் இதற்குச் சிறந்த முன்மாதிரிகளைக் காணலாம்.

உதாரணமாக, இறைத்தூதர் மூசா (அலை) மற்றும் இறைத்தூதர் ஹாரூன் (அலை) அவர்களின் வரலாற்றை எடுத்துக் கொள்ளலாம். அதிக சக்தியும் கொடூரத்தன்மையும் மிக்க ஃபிர்அவ்னிடம் சென்று வாதிடுமாறு மூசா

(அலை) அவர்கள் அல்லாஹ்வினால் கட்டளையிடப்பட்ட போது, தனக்கு உதவுமாறும், தனக்குத் துணையாக ஒருவரை அனுப்புமாறும் அல்லாஹ்விடம் மூசா (அலை) கேட்டுக் கொண்டார்கள். இக்கருத்தைத் திருக்குர்ஆனின் "தாஹா" எனும் அத்தியாயத்தின் 25-32 வரையிலான வசனங்களில் பின்வருமாறு காணலாம்:

قَالَ رَبِّ ٱشْرَحْ لِى صَدْرِى ﴿٢٥﴾ وَيَسِّرْ لِىٓ أَمْرِى ﴿٢٦﴾
وَٱحْلُلْ عُقْدَةً مِّن لِّسَانِى ﴿٢٧﴾ يَفْقَهُوا۟ قَوْلِى ﴿٢٨﴾ وَٱجْعَل
لِّى وَزِيرًا مِّنْ أَهْلِى ﴿٢٩﴾ هَٰرُونَ أَخِى ﴿٣٠﴾ ٱشْدُدْ بِهِۦٓ أَزْرِى
﴿٣١﴾ وَأَشْرِكْهُ فِىٓ أَمْرِى ﴿٣٢﴾

அப்பொழுது அவர் (மூசா) கூறினார்: " என்னுடைய இறைவனே! என்னுடைய நெஞ்சத்தை எனக்கு நீ விரிவாக்கி வைப்பாயாக! என்னுடைய காரியத்தையும் எனக்கு நீ இலேசாக்கி வைப்பாயாக! என்னுடைய சொல்லை அவர்கள் விளங்குவதற்காக, என் நாவிலிருந்து முடிச்சை (சிக்கலை) அவிழ்த்து விடுவாயாக! என் குடும்பத்திலிருந்து ஓர் உதவியாளராக, எனது சகோதரர் ஹாரூனை எனக்கு நீ ஏற்படுத்துவாயாக! அவரைக் கொண்டு என்னுடைய முதுகை நீ வலுவாக்குவாயாக! என் காரியத்தில் அவரைக் கூட்டாக்கி வைப்பாயாக!"

பாசத்திற்குரிய ஜமாஅத்தார்களே!

இறைத்தூதர் மூசா (அலை) அவர்கள் தனது சகோதரர் இறைத்தூதர் ஹாரூன் (அலை) அவர்களுக்கு எந்தளவு முக்கியத்துவம் கொடுத்துள் ளார்கள் என்பதைக் கவனியுங்கள். அவர்கள், மிகவும் சவால்மிக்க,

கஷ்டமான ஒரு காரியத்தைச் செயல்படுத்துவதற்காக தனது சகோதரரை உதவிக்கு அழைத்துள்ளார்கள். இவ்விதமான உறுதியானக் குடும்ப உறவுகளை நாம் ஏற்படுத்திக் கொண்டால், நமக்கு ஊக்கமளிக்கும் மூலமாக நமது குடும்பத்தை அமைத்துக் கொண்டால், குடும்பத்தாரில் ஒவ்வொருவரும் ஒருவர் மற்றவருக்கு உபதேசம் செய்து, தமக்குள் கருத்துவேறுபாடு கொள்ளாமலிருந்தால் எவ்வளவு சிறப்பாக இருக்கும்?

உண்மையில், இறைத்தூதர்களது குடும்பத்தார்களின் வாழ்க்கை வரலாற்றை நாம் ஆய்வு செய்து பார்த்தால், இவ்விதமான உறுதியான குடும்ப உறவுகள் அவர்களிடம் இருந்துள்ளதை அறியலாம். உதாரணமாக, இறைத்தூதர் யஃகூப் (அலை) அவர்களுக்கும் அவர்களின் அன்பு மகனார் இறைத்தூதர் யூசுப் (அலை) அவர்களுக்கும் மத்தியில் ஆழமான உறவுகள் காணப்பட்டன. எனவே தான், யூசுப் (அலை) அவர்கள், தான் கண்ட கனவினால் தனக்கு ஏற்பட்ட கவலையைப் பற்றி தனது தகப்பனாரிடம் பகிரங்கமாக பகிர்ந்து கொண்டார்கள். உண்மையில், இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களும் தனது குடும்பத்தாருடன் நெருக்கமான உறவை ஏற்படுத்தியிருந்தார்கள். தனது மனைவியர், பேரக் குழந்தைகள் மற்றும் மருமகனார்களை மிகவும் நேசித்து அவர்களுடன் நெருக்கமாக இருந்தார்கள்.

மேற்கண்ட வரலாறுகள், அனைத்து தகப்பனார்களிடமும், குறிப்பாக, இன்று இங்கு வந்துள்ள அனைத்து தகப்பனார்களிடம் நல்ல உணர்வுகளை ஏற்படுத்த வேண்டும். அவர்கள் தமது பிள்ளைகளுடன், குறிப்பாக, பதின்ம வயதிலுள்ள பிள்ளைகளுடன் மிகவும் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். காரணம், தற்காலத்தில் நமது பதின்ம

வயதுப் பிள்ளைகள் பலவிதமான மாற்றங்களையும் சவால்களையும் எதிர்கொண்டு வருகிறார்கள். அவர்களிடம் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்திக் கொண்டால் அவர்கள் நம்மை ஆலோசனை பெறும் மூலங்களாக அமைத்துக் கொள்வார்கள். பிரச்சனைகள் ஏற்படும் போது அவற்றை நம்மிடம் பகிர்ந்து கொண்டு, நம்மிடம் உபதேசத்தையும் உதவியையும் தேடுவார்கள். அந்நிலையில், நாம் அவர்களின் உணர்வுகள் மற்றும் அவர்களின் தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றும் ஆற்றலைப் பெறுவோம். மேலும், அப்போது அப்பிள்ளைகள் முறையான வழிகாட்டுதலைப் பெறுவதை நாம் உறுதி செய்ய முடியும். அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை முறைப்படி நாம் நிறைவேற்றவும் முடியும்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

ஒவ்வொருவரும் தன்னை முன்னேற்றிக் கொள்ள ஒருவர் மற்றவருக்கு உதவுதல், நற்காரியங்களைச் செய்தல், மற்றவர்கள் விஷயத்தில் நல்லெண்ணம் கொள்ளுதல், நமது குடும்பத்தார்கள் நல்லவர்களாகவே இருப்பார்கள் எனத் திடமாக நம்பிக்கை கொள்வது போன்றவை மிகவும் முக்கியமான மதிப்பீடுகளாகவும், நற்பண்புகளாகவும் உள்ளன. ஒவ்வொரு குடும்பத்தார்களும் சவால்களை எதிர்கொள்ளும் போது அம்மதிப்பீடுகள் அவர்களுக்கு உதவியாக இருக்கும். ஒவ்வொரு குடும்பமும் தனது பலஹீனத்தின் காரணமாக பல சவால்களை எதிர்கொள்கின்றன. எனினும், கவலைக்குரிய விஷயம் யாதெனில், நாம் நமது உணர்வுகளையும், கவலைகளையும் நமது குடும்பத்தார்களை விட, நமது நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புவதாகும். உண்மையில், நாம் நமது பிரச்சனைகளை நமது குடும்பத்தார்களுடன் பகிர்ந்து கொள்ள நாடும் போது

நமக்கு தர்ம சங்கடமான நிலை ஏற்படலாம். எனினும், இந்நிலையில் நாம் முன்னேற்றம் காண்பது எவ்வாறு? எனச் சிந்திக்க வேண்டும். குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் மற்றவருடன் பேசுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். நமது அலுவல்மிக்க வேலைத் திட்டங்கள் மற்றவர்களுடன் பேசுவதை விட்டும் நம்மைத் தடுக்கலாம். காரணம், பிள்ளைகள் கல்விக்கூடங்களுக்குச் செல்வதிலும், பெற்றோர்கள் தமது வேலைகளின் காரணமாகவும் ஒருவர் மற்றவருடன் பேச முடியாத நிலை ஏற்படலாம். பெற்றோர்கள் தமது வாழ்வில் ஏற்படும் நிகழ்வுகளை, எதிர்கொள்ளும் சவால்களை தமது பிள்ளைகளுடன் வெளிப்படையாகவும், மரியாதையாகவும் பகிர்ந்து கொள்வதில் ஆர்வமாக இருக்க வேண்டும். இது நமது குடும்பக் கலாச்சாரத்தில் இல்லையெனில், நேருக்கு நேர் பேச நாம் தயங்கினால், நமது உணர்வுகளையும் சிந்தனைகளையும் நமது குடும்பத்தாருடன் பகிர்ந்து கொள்ள சமூக ஊடகங்களைப் பயன்படுத்தலாம். பெற்றோர்கள், தமது பிள்ளைகள் மீது அதிக அன்பு கொண்டுள்ளார்கள், அவர்கள் மீது அதிக அக்கறை செலுத்துகிறார்கள் என்பதைத் தமது பிள்ளைகளுக்கு வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும். இப்பழக்கம் பிள்ளைகள் உங்கள் மீது அன்பு கொள்வதற்கு மிகவும் உதவியாக இருக்கும். அப்போது உங்கள் பிள்ளைகள், உங்களை ஒழுக்கத்தைப் போதிப்பவராக மட்டும் பார்க்கமாட்டார்கள்; நீங்கள் அவர்கள் மீது உண்மையாக அன்பு கொள்கிறீர்கள் என்பதையும் உணர்வார்கள்.

புனிதமிக்க இந்த ரமதான் மாதத்தில் காணப்படும் அதிக நன்மைகளைச் சம்பாதிப்பதற்கு கடின முயற்சிகளை மேற்கொள்ளும் நாம், நமது குடும்பத்தார்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வதிலும் ஆர்வம் காட்ட வேண்டும். அதே சமயத்தில், அல்லாஹ் சுப்ஹானஹூ வதஆலாவிற்கு

அடிபணிந்த, அன்பும் அமைதியுமிக்க குடும்பமாக நமது குடும்பத்தை உருவாக்குவதற்கும் நாம் முயற்சிக்க வேண்டும். பிரார்த்தனைகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற புனிதமிக்க இந்த ரமதான் மாதத்தில், நமது உள்ளங்களில் காணப்படும் அனைத்து விருப்பங்களையும், ஆதரவுகளையும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நிறைவேற்றி வைப்பானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيمِ ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيمِ ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيعُ الْعَلِيمُ ، أَقُولُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيمَ لِي وَلَكُمْ ، وَلِسَائِرِ الْمُسْلِمِينَ وَالْمُسْلِمَاتِ ، وَالْمُؤْمِنِينَ وَالْمُؤْمِنَاتِ ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِينَ وَيَا نَجَاةَ التَّائِبِينَ.